ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1986/47 - 2016 සැප්තැම්බර් මස 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.09.29

*1986/47 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் திஸ்ஸமஹாராம நீர் வழங்கல் கருத்திட்டத்தினை மேம்படுத்தற் பொருட்டு காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கிறேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்*
*அமைச்சர்.*

*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*"லக்திய மெதுர",*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2016, செத்தெம்பர் 05.*
*5/2/2/1209.*

**அட்டவணை**

*அம்பாந்தோட்டை மாவட்டத்தில் திஸ்ஸமஹராம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 37 தெபரவெவ கிராம அலுவலர் பிரிவில், தெபரவெவ எனும் ஊரில் அமைந்துள்ள கிரிந்தம்பய ரக்ஸிதய எனும் காணியில் காட்டப்பட்டுள்ள உரிமம் பெற்ற நிலஅளவையாளர் திரு. ரீ. எச். ஜீவானந்த அவர்களினால் அளவையிடப்பட்ட திட்ட இல. 2009/WB/25 இலுள்ள துண்டு இலக்கம் 1 ஆக காட்டப்பட்டுள்ள மொத்த பிரமாணத்திலிருந்து 12.5 பேர்ச் வரையுள்ள கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளினுள் அமைந்த காணித்துண்டு :-*

*வடக்கு : திரு. ரீ. எச். புண்ணியாரத்ன அவர்கள் உரிமம் கொண்டாடும் காணி ;*
*கிழக்கு : கெமுணுபுரவிலிருந்து திஸ்ஸமஹராமை வரையிலான வீதி ;*
*தெற்கு : தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக் காணி ;*
*மேற்கு : கிரிந்தி ஓயா.*

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: பிரதேச சபை,*
*திஸ்ஸமஹாராம.*

*10 - 360*

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டு கருத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண நகர மலவடிகாலமைப்பு உந்தும் நிலையம் 21 இணை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2016, செத்தெம்பர் 26.
5/2/3/1204.

**அட்டவணை**

யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் J/83 கொட்டாடி கிராம அலுவலர் பிரிவில் யாழ் நகர் எனும் ஊரில் அமைந்துள்ள கற்குளம் எனும் காணியின் மொத்த பிரமாணத்திலிருந்து 6mx 4m வரையான கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளினுள் அமைந்த காணித்துண்டு :-

வடக்கு : கற்குளம் ;
கிழக்கு : யூனியன் வீதி ;
தெற்கு : எம். சிவசான்திவேல் மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணி ;
மேற்கு : கற்குளம்.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

10 - 361